Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JULY 7, 2023

வெள்ளிக்கிழமை ஜூலை 07, 2023 | ஒளி: 09 கதிர் 035 | பக்கம்:06 | வடக்கு,கிழக்கு | FREE

## லா:.ப் குறைந்தது




லாஃப் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலை வியாழக்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, 12.5 கிலோகிராம் நிறையுள்ள சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 300 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 3,690 ரூபாவாகும். இதேவேளை, 5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 120 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. புதிய விலை 1,476 ரூபாவாகும்.

# சர்வதேச நிபுணத்துவ மேற்பார்வை அவசியம்

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாய் பகுதியில் மனித எச்சங்கள் இனங்காணப்பட்ட பகுதி, நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தோண்டும் நடவடிக்கை வியாழக்கிழமை (07) முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையினை பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்டவர்கள் பார்வையிட்டனர். இதன் போது கருத்துரைத்த சுமந்திரன்,

“இந்த அகழ்வு நடவடிக்கை குறித்த முறைப்படி செய்யப்படுவதாக தெரியவில்லை. எவ்வாறு மேற்கொள்ளப்படவேண்டும் என்ற சர்வதேச நியதிகள் உள்ளன. அந்த நியதிகள் எதுவும் இங்கு பின்பற்றப்படுவதாக தெரியவில்லை” என்றார்.

“ஒரு புதைகுழியில் ஒரு மனித உடலினை தோண்டியெடுத்து செய்கின்ற பரிசோதனைக்கும் பல உடலங்கள் உள்ள மனித புதைகுழியாக இருக்கின்ற ஒரு பகுதி தோண்டப்பட்டு எடுப்பதற்கும் இடையில் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. இதனை செய்வதற்காக சர்வதேச நியதிகள் ஏராளமாக இருக்கின்றன” என்றார்.

தொடர்ச்சி P2





முல்லைத்தீவு மனித புதைகுழி:

# 13 எச்சங்கள் இனங்காணப்பட்டன

■ விஜயரத்தினம் சரவணன், சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்குத்தொடுவாய் மத்தி பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின், பெண் போராளிகளது என சந்தேகிக்கப்படும் மனித எச்சங்கள் இனங்காணப்பட்ட பகுதியில் வியாழக்கிழமை (06) அகழ்வு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி T.பிரதீபன் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணிகளில் 13 சடலங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அகழ்வு பணிகளும் இடைநிறுத்தப்பட்டன.

தொடர்ச்சி P2

## ‘சதொச’ மனித புதைகுழி:

# அறிக்கையிட கட்டளை

■ ரொசேரியன் லெம்பட்

மன்னார் ‘சதொச’ மனித புதைகுழி அகழ்வு தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கையை தயாரிப்பதற்கான கட்டளை, மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் தெரிவித்துள்ளார். மன்னார் சதொச மனித புதைகுழி வழக்கு, மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் புதன்கிழமை(05) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஏற்கெனவே அழைக்கப்பட்ட 27 திணைக்களங்களின் பிரதிநிதிகள் சார்பில் பலர் பிரசன்னமாகியிருந்தனர். அரச தரப்பு சட்டத்தரணி ,விசேட சட்ட வைத்திய அதிகாரி (ஜே.எம்.ஓ), பாதிக்கப்பட்ட தரப்பு சட்டத்தரணிகளும், ஓ.எம்.பி அலுவலக சட்டத்தரணிகளும், இராணுவ சட்டத்தரணிகள் போன்ற பலர் பிரசன்னமாகி இருந்தனர்.



இந்த புதை குழியில் இருந்து 376 மனித எச்சங்கள் ஏற்கெனவே, எடுக்கப்பட்ட நிலையில் அதனை மீண்டும் அகழ்ந்து மிகுதி மனித எச்சங்களை உடனடியாக எடுக்கத் தேவையில்லை என்று ஒட்டுமொத்த தரப்பினரின் இணக்கப்பாட்டுக்கு வந்தனர்.

தொடர்ச்சி P2

# அர்ஜுன மகேந்திரனை அழைத்து வர முடியாது

### மோசடியாளர் ரணில் ஜனாதிபதி என்கிறார் அநுர

புதிய ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் ஊடாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை அழைத்து வர முடியுமா என்று கேள்வி எழுப்பிய ஜே .வி.பி.தலைவரும் எம்.பி.யுமான அனுர குமார திஸாநாயக்க, முடியாது என்று தெரிவித்ததுடன் ஏனைய நாடுகளில் அவ்வாறு இல்லை என்றும் சுட்டிக்காட்டினார்.



தொடர்ச்சி P2

சட்டவிரோதமான சொத்துக்கள்

# எங்கிருந்தாலும் அரசுடமையாகும்

சட்டவிரோதமான முறையில் சேர்க்கப்பட்ட சொத்துக்கள் பிற நாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தால் அந்த சொத்துக்களை அரசுடமையாக்குவதற்கும், முறைகேடான முறையில் சேர்க்கப்பட்ட சொத்துக்களை அரசுடமையாக்குவதற்குமான அதிகாரம் உள்ளது என்று நீதி,சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அந்த அதிகாரத்தை, ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவுக்கும்,நீதிமன்றங்களுக்கும் வழங்கும் வகையிலான விதிமுறைகள் சட்டமூல ஏற்பாடுகளில் உள்ளன என்றார்.



தொடர்ச்சி P2




# கொள்கை வட்டி வீதங்களில் குறைப்பு

வங்கி வட்டி சதவீதங்களை நிர்ணயிக்கும் கொள்கை வட்டி சதவீதங்களைக் குறைப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, நிலையான வைப்பு வட்டி சதவீதம் (Standing Deposit Facility Rate - SDFR) மற்றும் நிலையான கடன் வசதிக்கான வட்டி கதவீதம்(Standing Lending Facility Rate - SLFR) 200 அடிப்படை அலகுகளால் அதாவது 2 சத வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# ‘மழை விடுமுறை’

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, நுவரெலியா மாவட்ட கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இன்று (07) வரையிலும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு, புதன்கிழமை (05) முதல் வெள்ளிக்கிழமை (07) வரையிலும், நுவரெலியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு கடந்த இரண்டு நாட்களும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளன.



கடும் மழை, சீறி வீசும் காற்று, மண்சரிவு மற்றும் வெள்ளம் ஆகியவற்றினால், நுவரெலியா மாவட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருடனின் தாயிடம் சாஸ்திரம் கேட்பதாகும்

மக்கள் பிரதிநிதிகள் 225 பேரும் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பங்களித்துள்ளனர். ஆகவே, திருடனின் தாயிடம் திருடன் யார் என சாஸ்திரம் கேட்டும் பயனில்லை என அரச தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

# முழங்காவில் மதுபானசாலைக்கு இடைக்கால தடை உத்தரவு

■ யது பாஸ்கரன்

கிளிநொச்சி, முழங்காவில் பகுதியில் அமைக்கப்பட்டுவரும் மதுபானசாலைக்கு, வியாழக்கிழமை (06) முதல் 14 நாட்கள் தற்காலிக இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட முழங்காவில் பிரதேசத்தில் முழங்காவில் விநாயகர் ஆலயம், பாடசாலை, ஆசிரியர் விடுதி, பொது விளையாட்டு மைதானம் ஆகியவற்றின் மையப் பகுதியில் மதுபான சாலை அமைப்பதற்கு பிரதேச பொது அமைப்புக்கள் மற்றும் கிராம மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொதுத் தொல்லை ஏற்படுதவதாக தெரிவித்து, பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்து, வியாழக்கிழமை (06) குறித்த வழக்கு விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

பொது அமைப்புகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன், சட்டத்தரணி எஸ். விஜய ராணி உள்ளிட்டோர் முன்னிலையாகி இருந்தனர்.

தொடர்ச்சி P2



# EPF,ETF திருட்டு கும்பலுடன் இணைவதா

### உதயா எம்.பி கேள்வி: ஆபத்து என்கிறார்

■ துவாரகஷான்

நாட்டில் உள்ள பல லட்சம் தொழிலாளர்களின் EPF, ETF பணத்தில் கை வைத்துவிட்டு ஒன்றிணைந்து செயற்பட வருமாறு எதிர்கட்சிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுப்பது மிகவும் வேடிக்கையான விடயம் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# மது நிலையங்களை கண்டறிந்து தடை செய்

■ ஆ.ரமேஸ்

சட்டப்பூர்வ அனுமதி பெற்று இயங்கும் மது விற்பனை நிலையங்களுக்கு அப்பால் நுவரெலியா மாநகரின் பல இடங்களில் அனுமதியின்றி மது விற்பனை நிலையங்கள் இயங்குகின்றன. அவற்றைக் கண்டறிந்து தடை செய்ய வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

“இலங்கை சமூக நடவடிக்கை மாற்றம்” எனும் அமைப்பு மற்றும் சர்வமத குருமார்களே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த அமைப்பு தலைமையில் நுவரெலியா கூட்டுறவு சங்க விடுதியில் ஊடகவியலாளர் சந்திப்பை புதன்கிழமை (05) நடத்தியது.

இதில், அவ்வமைப்பின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் சந்திரா பியசீலி மற்றும் ருவான் ஏமந்த ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# சர்வதேச நிபுணத்துவ மேற்பார்வை அவசியம்

“நிலைமைகளை அவதானிக்கும் போது, இதில் இருந்து உண்மையினை கண்டறிவதற்கு அரசாங்கத்துக்கு முழுமையான மனதில்லாமல் இருப்பதும் இன்னும் ஒருபடி மேல் சொன்னால் அவற்றை மூடி மறைப்பதும் தான் அவர்களின் நோக்கமாக இருக்கின்றது” என்றார். “இந்த இடத்தில் இருந்து எடுக்கப்படுகின்ற சான்று பொருட்கள் கூட கவனமாக பேணி பாதுகாக்கப்படவில்லை. இந்த இடத்தினை எவ்வாறு பாதுகாப்பாக வைத்திருக்கின்றார்கள் என்ற கேள்விக்குறியும் இருக்கின்றது. நேரம் கடந்து செல்கின்றது. பொலிஸாரின் கையில் இதனை விடப்போகின்றார்களா எனக் கேட்ட அவர், வேலியே பயிரை மேய்ந்துவிடக்கூடாது. புலனாய்வாளர்கள் ஏராளமானவர்கள் இங்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர்” என்றார். “விடயத்தை மறைக்க நினைப்பவர்கள் அடுத்த நடவடிக்கைக்கு தயாராகின்றார்கள். ஆகையால் இது சரியான விதத்தில் பாதுகாக்கப்படவேண்டும். சரியான முறையில் சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில் மேற்பார்வை உடனடியாக கொண்டுவரப்படவேண்டும்” என்றார்.

# 13 எச்சங்கள் இனங்காணப்பட்டன

ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகப் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு மனித உரிமை சட்டத்தரணிகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்புகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரது கண்காணிப்புகளுக்கு மத்தியில் இந்த அகழ்வுப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் மத்தி பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினை மேற்கொள்வதற்காக கனரக இயந்திரம் கொண்டு நிலத்தினை 29.06.2023 அன்று மாலை தோண்டியபோது நிலத்தில் புதைக்கப்பட்ட நிலையில் மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தினைத் தொடர்ந்து கொக்கிளாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதையடுத்து அவர்கள் விசாரணைகளை முன்னெடுத்தனர் .

இது தொடர்பாக 30.06.2023 நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா குறித்த இடத்தை அன்றைய தினம் சென்று பார்வையிட்டார்.

அதன்பின்னர் விடுக்கப்பட்ட உத்தரவுக்கு அமையவே, அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

நீர் இணைப்பினை வழங்குவதற்காக அகழ்ந்தபோது, தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் பயன்படுத்திய சீருடைகள், பெண்களின் உள்ளாடைகள் என்பனவும் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ’சதொச’ மனித புதைகுழி: அறிக்கையிட கட்டளை

இந்த மனிதப் புதைகுழியில் இருந்து மனித எச்சங்கள் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், காணாமல் போனோர் தரப்பில் ஒட்டுமொத்த அறிக்கை(compression report) என்ற அடிப்படையிலும் இதுவரையில் நடந்தது என்ன? இனி தொடர்ந்து என்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது, அவற்றை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும், என்பன போன்ற விளக்கங்களை சட்ட வைத்திய அதிகாரி ராஜபக்ஷ நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அது வரையான காலப்பகுதியில் குறித்த புதைகுழியை பொலிஸார் முழுமையாக பாதுகாக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். இந்த வழக்கு செப்டம்பர்(9) மாதம் 12,13-ம் திகதிகளில் மீண்டும் அழைப்பதற்கு திகதி குறிப்பிடப்பட்டுள்ளது.

# அர்ஜுன மகேந்திரனை அழைத்து வர முடியாது

பிணைமுறி மோசடியாளர் என்று குறிப்பிட்ட ரணில் விக்கிரமசிங்க இப்போது ஜனாதிபதியாக இருக்கின்றார். அவரை மோசடியாளர் என்று குறிப்பிட்டவர்கள் தற்போது அமைச்சர்களாக இருக்கின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான்,பங்களாதேஷ் ,இந்தியா போன்ற நாடுகளில் பிரதமர் மற்றும் அரசியல்வாதிகள் ஊழல் மோசடி குற்றத்தால் சிறை சென்றுள்ளார்கள், செல்கிறார்கள். ஆனால் இலங்கையில் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கூட சிறை செல்வதும் இல்லை, தண்டனை அனுபவிப்பதும் இல்லை என்று குறிப்பிட்ட அவர்,. இயற்றப்பட்ட சட்டத்தில் எந்த குறைப்பாடுகளும், பலவீனமும் இல்லை. அரசியல் காரணிகளுக்காகவே சட்டங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்றார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (07) இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்து பேசுகையில்,

பொருளாதார படுகொலையாளிகள் சுதந்திரமாக இருக்கும் நிலையில் அப்பாவி மக்கள் பொருளாதார பாதிப்புக்கு நஷ்டஈடு செலுத்துகிறார்கள். அத்தியாவசிய பொருள் விலையேற்றத்தால் நடுத்தர மக்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் பொருளாதார குற்றவாளிகள் சுகபோகமாக வாழ்கிறார்கள். பொருளாதார படுகொலையாளர்களினால் நாடு பாதிக்கப்பட்டுள்ளது.இதனை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது. ஊழல் ஒழிப்புக்கு புதிய சட்டத்தை இயற்ற அவதானம் செலுத்தப்படுகின்ற நிலையில் .நடைமுறையில் உள்ள சட்டம் ஏன் பலவீனமடைந்தது என்பது குறித்து ஆராய வேண்டும். நடைமுறையில் உள்ள சட்டத்துக்கு சிறுமீன்களான அடிமட்டத்தவர்களே அகப்படுகிறார்கள். பெரிய மீன்களான அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் ஆதரவு உள்ளவர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள்.ஆகவே நடைமுறையில் உள்ள சட்டம் பலவீனமானது என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

600 மில்லியன் சொத்து சேர்ப்பு விவகாரத்துடன் தொடர்புடைய பாராளுமன்ற உறுப்பினரை ஆணைக்குழுவுக்கு முன்னிலையாகுமாறு இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அழைப்பு விடுத்த போது அரசியல் வரப்பிரசாதங்களை கொண்டு அவர் தப்பித்து விட்டார்.

# எங்கிருந்தாலும் அரசுடமையாகும்

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (06) இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமைய ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை அரசு தயாரித்துள்ளதாக குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் ஆரம்ப பணிகள் நல்லாட்சி அரசின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. நீதியமைச்சர் என்ற ரீதியில் ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை சமர்ப்பித்து அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொண்டேன்.

2018 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசின் அமைச்சரவையில் இருந்து நான் நீக்கப்பட்டதை தொடர்ந்து ஊழல் எதிர்ப்பு சட்டமூல பணிகள் இடைநிறுத்தப்பட்டன. கால மாற்றத்தை தொடர்ந்து மீண்டும் அந்த பணிகள் என்னிடம் வந்து சேர்ந்துள்ளன .வங்குரோத்து நிலைக்கு ஊழல் பிரதான காரணம் என மக்கள் உறுதியாக வலியுறுத்தினார்கள்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை இயற்ற அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியது.ட்ரான்ஸ்பேரன்சி நிறுவனம்,முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான நீதிக்கான சமூக அமைப்பு உட்பட பல்வேறு தரப்பினரது ஆலோசனைக்கு அமைய ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றார்.

# திருடனின் தாயிடம் சாஸ்திரம் கேட்பதாகும்

நாட்டின் நிதி வங்குரோத்து நிலைக்கான காரணங்களை ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழுவின் தலைவராக சாகர காரியவசம் நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் விடுத்த அறிவிப்பு தொடர்பில் இடம்பெற்ற தர்க்கத்தின் போது, “நாடு வங்குரோத்து அடைந்தமை குறித்து தேடிப்பார்க்கும் விசேட குழுவின் தலைவராக அரச தரப்பு எம்.பி.யான சாகர காரியவசம் நியமிக்கப்பட்டுள்ளார். இது திருடனின் தாயிடம் திருடன் யார் என சாஸ்திரம் கேட்பது போன்றது” என எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர், மேலும் கூறுகையில்,

“இந்த நாடு பொருளாதார நெருக்கடியில் இருக்கும் போது உதவுமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தோம். ஆனால் சில சமயங்களில் எதிர்க்கட்சிகள் தங்கள் சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரலை செயல்படுத்துகின்றன. வரியைக் குறைக்கும் போதும் ஏசுகிறார்கள். அதிகரித்தாலும் ஏசுகிறார்கள். அந்த நபர்களுக்கு எந்த நோக்கமும் இல்லை.

ஓர் அரசாங்கம் மட்டுமல்ல, 225 மக்கள் பிரதிநிதிகளும் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பங்களித்துள்ளனர். எனவே, திருடனின் தாயிடம் திருடன் யார் என சாஸ்திரம் கேட்டும் பயனில்லை. இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாமல் சபையின் பணிகளைத் தொடருமாறு கேட்டுக்கொள்கிறேன்” என்றார்.

# கொள்கை வட்டி வீதங்களில் குறைப்பு

ஜூலை மாதத்துக்கான நாணயக் கொள்கை நிலைப்பாட்டை இலங்கை மத்திய வங்கி வியாழக்கிழமை (06) காலை அறிவித்தது.

பணவீக்கத்தின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக இலங்கை மத்திய வங்கி தனது நாணயக் கொள்கை வட்டி சத வீதங்களை உயர் பெறுமதியில் பேணியது. வியாழக்கிழமை (06) வெளியிடப்பட்ட திருத்தங்களின் அடிப்படையில், வங்கிகளுக்கு கடன் வழங்கும் போது மத்திய வங்கியால் அறவிடப்படும் வழமையான கடன் வசதி சதவீதம் 14 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

**❝ பணவீக்கம் எதிர்பார்த்த அளவை விட குறைவடைந்துள்ளதைக் கருத்திற்கொண்டு மத்திய வங்கி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.**

மத்திய வங்கி தம்மிடம் வைப்பிலிடும் வணிக வங்கிகளுக்கு செலுத்தும் வட்டி சதவீதத்தை 13 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாக குறைத்துள்ளது. இதற்கிணங்க எதிர்வரும் நாட்களில் சந்தை வட்டி சதவீதங்களும் குறைவடையவுள்ளன.

பணவீக்கம் எதிர்பார்த்த அளவை விட குறைவடைந்துள்ளதைக் கருத்திற்கொண்டு மத்திய வங்கி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

# EPF, ETF திருட்டு கும்பலுடன் இணைவதா

ஜனாதிபதியின் இந்த செயற்பாடானது திருட்டு சம்பவம் இடம்பெற்ற பின்னர் அதனை கண்டுபிடிக்க வந்தவர்களையும் திருட்டுக் கும்பலில் சேர்ந்து பங்காளியாகுமாறு அழைப்பதற்கு சமனானது என்றார்.

**❝ கடன் வட்டி வீதங்களை அதிகரிக்க நேரிடும். நிலையான வைப்புகளுக்கு வழங்கும் வட்டி வீதத்தைக் குறைக்க நேரிடும். இதனால் நாட்டு மக்கள் அதிகம் பாதிக்கப்படுவர்**

EPF இன் நோக்கமானது, பணியாளரின் ஓய்வூதியக் கட்டத்தில் நிதி ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பணியாளரின் பங்கிற்கு வெகுமதி அளிப்பதும் ஆகும். ஆனால் அரசாங்கத்தின் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் காரணமாக கடன் கழிப்பு செய்யப்பட்டு கடன் வழங்கிய நிறுவனங்கள் பாதிக்கப்படும்.

அப்படி பார்க்கையில் இலங்கையின் மொத்த உள்நாட்டுக் கடன் 12,000 பில்லியன்களாகும். இது 74 சதவீதமாகும். இதில் 27 சதவீத கடன் ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து பெறப்பட்டுள்ளது.

எனவே, இந்த கடன் மறுசீரமைப்பு திட்டத்தால் நிச்சயமாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் வங்கிகளுக்கும் இழப்பு ஏற்படும். இந்த இழப்பை ஈடு செய்ய வங்கிகள் கடன் வட்டி வீதங்களை அதிகரிக்க நேரிடும். நிலையான வைப்புகளுக்கு வழங்கும் வட்டி வீதத்தைக் குறைக்க நேரிடும். இதனால் நாட்டு மக்கள் அதிகம் பாதிக்கப்படுவர் என்றார்.

# மதுபானசாலைக்கு இடைக்கால தடை

இதனையடுத்து, குறித்த பிரதேசத்தில் இருக்கின்ற பாடசாலை மற்றும் அருகில் இருக்கின்ற மிகப் பழமையான ஆலயம் ஆகியவற்றுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் இது அமைந்திருப்பதனால் இதற்கான தடை உத்தரவு ஒன்றினை பிறப்பிக்குமாறு விண்ணப்பம் செய்யப்பட்டதை அடுத்து மேற்படி விடயங்களை கருத்தில் எடுத்து இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எதிர்வரும் 20 ஆம் திகதி மறுதவணை இடப்பட்டுள்ளது.

# மது நிலையங்களை கண்டறிந்து தடை செய்

அத்துடன் இராகலை சூரியகந்த பௌத்த விகாரை பீடாதிபதி சுமேந்தலங்கார கொங்கொட, ஆலய குருக்கள் ஏ.நந்தகுமார், மௌலவி எ.எ.எம். இப்திகார் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது தமது கருத்துக்களை தெரிவித்த சர்வ மத குருமார்கள், நுவரெலியா சுற்றுலா நகரம் என்பதனால் அதிகமான மதுபான கடைகளை அமைத்து நகருக்கு வருபவர்களை மதுவுக்கு அடிமைகளாக்க இடமளிக்க முடியாது.

அதேபோல குடும்பஸ்தர் பலர் மதுவுக்கு அடிமையாகி தாம் உழைக்கும் பணத்தை மதுவுக்கு செலவு செய்து வருவதால் குடும்ப வாழ்கையில் பிணக்குகள் ஏற்பட்டு நிம்மதி இழந்து சண்டை சச்சரவு என்று பொலிஸ், நீதிமன்றமென செல்கின்றனர். நோய்களுக்கும் இலக்காகி விடுகின்றனர். ஆகையால், நுவரெலியா மாவட்டத்தில் புதிய மதுபான நிலையங்களை திறக்க அனுமயளிக்கக்கூடாது. அத்துடன், , சட்டவிரோதமாக இயங்கும் மதுபான நிலையங்களை இனங்கண்டு அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

# தொழிலாளியை கொன்ற மரத்தை வெட்டியவர் மரணம்

மெய்யன்

தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த பெண் தொழிலாளி, தேநீர் பருகிக்கொண்டிருந்த போது, மரமொன்று முறிந்து விழுந்தத்தில் அத்தொழிலாளி மரணமடைந்த சம்பவம் வத்தேகம, மடுகலை நெல்லிமலைத் தோட்டத்தில் செவ்வாய்க்கிழமை (04) இடம்பெற்றது.

அவ்விடத்தில் இருந்த மற்றுமொரு தொழிலாளி கால் முறிந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், அந்த மரத்தை வெற்றி அகற்றுவதற்காக தோட்ட நிர்வாகத்தினால் நான்கு தொழிலாளர்கள் அனுப்பிவைக்கப்பட்டனர்.

அவர்கள் மரத்தை வெட்டி அப்புறப்படுத்தினர். அதன்பின்னர் வீட்டுக்குச் சென்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையான மணிமுத்து இராஜரட்ணம் ( வயது 51) வியாழக்கிழமை (06) மரணமடைந்துள்ளார். மரம் விழுந்த சம்பவத்தில் நான்கு பிள்ளைகளின் தாயான, சண்முகம் விஜயலட்சுமி என்பவர் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளைஇ மலையகத்தில் சீரற்ற காலநிலை நிலவிவருவதுடன், ஆங்காங்கே சிறுசிறு சேதங்கள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பள்ளிவாசலின் படத்தினை

# பயன்படுத்த முற்றாகத் தடை

எம்.எஸ்.எம்.ஸாகிர்

சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் முகப்புத் தோற்றத்தினை (பள்ளிவாசலின் படம்) எக்காரணம் கொண்டும் தனிநபர் யாரும் பயன்படுத்துவது பள்ளிவாசல் நிர்வாகத்தினால் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளிவாசல் நிர்வாகத்தினால் வெளியிடப்பட்டுள்ள




அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அண்மைக்காலத்தில் பள்ளிவாசலின் படத்தைப் போட்டு சட்டத்திற்கு முரணான முறையில் தனிநபர் ஒருவரால் முகப்புத்தகத்தில் (Facebook) பயன்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் படத்தினை பெரிய பள்ளிவாசலின் அனுமதி இல்லாமல் தனிநபர் யாரும் பயன்படுத்தக் கூடாது என்றும் அவ்வாறு மீறி பயன்படுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாலம் சேதமடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது



யது பாஸ்கரன்

கிளிநொச்சி ஏ-09 வீதி இரணைமடுச் சந்தியினையும் பாரதி புரத்தினையும் இணைக்கும் செபஸ்தியார் வீதியில் கடந்த 2020 ஆம் ஆண்டு கரைச்சி பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்ட பாலம் சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுவதனால் இதனூடாக போக்குவரத்து செய்ய முடியாது மிக ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி நகரத்தை அன்மித்த அதிக சனத்தொகை கொண்ட பிரதேசங்களாக காணப்படும் பாரதிபுரம் கிழக்கு பாரதிபுரம் வடக்கு கிருஸ்ணபுரம் மலையாளபுரம் ஆகிய கிராமங்களையும் ஏ-09 வீதியையும் இணைக்கும் பிரதான வீதியாக செபஸ்தியார் வீதி காணப்படுகிறது. மேற்படி வீதியை தினமும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என 1000க்கும் மேற்பட்டோர் பயன்படுத்தி வருகின்றனர்

இவ்வாறு குறித்த பாலம் சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுவது தொடர்பில் பிரதேச மக்களால் சுட்டிக் காட்டப்பட்டிருந்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியர் குத்தியதில் இந்தியர் பலி

கொழும்பு கோட்டையில் உள்ள உணவகம் ஒன்றில் முகாமையாளராக கடமையாற்றும் இந்தியாவைச் சேர்ந்த ஒருவர், அதே ஹோட்டலின் ஊழியரான இந்தியாவைச் சேர்ந்த சக ஊழியர் ஒருவரைக் கொலை செய்துள்ளதாக கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் புதன்கிழமை (05) இரவு இடம்பெற்றுள்ளது. குறித்த சம்பவத்தில் அஜய் குமார் என்ற 29 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார். சந்தேகத்தின் பேரில் ஹோட்டல் முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கொலைக்குப் பயன்படுத்திய கத்தியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

உணவகத்தில் சந்தேக நபருக்கும் அஜய் குமாருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியதையடுத்து இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிய வந்துள்ளது.




## திறன் வகுப்பறைகள் திறந்து வைப்பு

வவுனியா வடக்கு கல்வி வலயத்திலுள்ள நெடுங்கேணி கோட்ட பாடசாலைகள் நான்குக்கு, திறன் பலகைகள் பொருத்தப்பட்டு மாணவர்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளன.

தொழினுட்ப இலத்திரனியல் சாதனங்களின் பாவனை தம் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்தி வருவது குறித்து மாணவர்கள் ஆர்வம் கொண்டிருப்பதும் அதனை உணர்ந்து ஆசிரியர்கள் திறன் பலகையினூடாக கற்பிக்க விளைவதும் அனுசரணையாளர்களை ஊக்குவித்து வருகின்றது. இவ்வகையில் மிகவும் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள புளியங்குளம் ஆரம்ப பாடசாலை,மதியாமடு விவேகானந்த வித்தியாலயம், சின்னபூவரசன்குளம் விக்கினேஸ்வரா மவி மற்றும் பன்றிக்கெய்தகுளம் வித்தியாலயத்தை சேர்ந்த 588 மாணவர்கள் பயன் பெறவுள்ளார்கள்.

## சிறுவர் அபிவிருத்திக்குழு கூட்டம்



பேரின்பராஜா சபேஷ்

மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழுவின் இரண்டாம் காலாண்டிற்கான கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா விழிகாட்டுதலின் கீழ் உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் வியாழக்கிழமை (06) நடைபெற்றது.

இதன்போது மாவட்டத்தின் சிறுவர்களது உரிமைகளை பாதுகாத்து அவர்களுக்கான சுபீட்சமான எதிர்காலத்தினைப் பெற்றுக் கொடுப்பதில் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் பிரதேச மட்டத்தில் சிறுவர்களின் கல்வி, சுகாதாரம், போசாக்கு மற்றும் பாதுகாப்பு, சிறுவர் துஸ்பிரயோகம், சிறுவர் ஊழியம், போதைவஸ்து, வீதியோர யாசகம் மற்றும் வியாபாரம் உட்பட சிறுவர் அச்சுறுத்தல் தொடர்பான பல விடயங்கள் தொடர்பாக இதன்போது ஆராயப்பட்டன.

## 69 வயதான பெண் துஷ்பிரயோகம்

சுமணசிறி குணதிலக்க

மனவளர்ச்சி குற்றிய 69 வயதான பெண்ணை, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் கீழ், திருமணமான 29 வயதான இளைஞன் 8 மாதங்களுக்குப் பின்னர் புதன்கிழமை (05) கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம், மொனராகலை குடாஓயா பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.


2022 ஒக்டோபர் 4ஆம் திகதியன்று இந்தப் பெண் வீட்டில் தனியாக இருந்தபோது, சந்தேகநபர் தண்ணீர்க்கேட்டுள்ளார். தண்ணீர் எடுக்க அப்பெண் வீட்டுக்குள் நுழைந்தபோது, பின்னாலேயே சென்ற அவ்விளைஞன் பலவந்தப்படுத்தி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

## விபத்தில் ஜோடி பலி

குருநாகல்-தம்புள்ளை பிரதான வீதியில் வனாந்தர பிரதேசத்தில் அதிக வேகத்துடன் பயணித்த லொறியும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்கு உள்ளானதில், ஜோடியொன்று பலியாகியுள்ளது.

மரணடைந்த அந்த ஜோடியில், கணவன் கடற்படையில் கடமையாற்றுகின்றார். மனைவி சுயதொழிலில் ஈடுபடுகின்றார்.

கணவன், மனைவியான இவ்விருவரும் பாடசாலையில்



ஆறாம் தரத்தில் பயிலும் தன்னுடைய ஒரேயொரு பிள்ளையை அழைத்துவர வியாழக்கிழமை (06) சென்றுக்கொண்டிருந்த போதே இவ்வனர்த்தத்துக்கு முகங்கொடுத்துள்ளனர்.




## உபகரணங்கள் கையளிப்பு

திருகோணமலை, கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட கந்தளாய் ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்துக்கு தனவந்தர் ஒருவர், மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான சிசிரிவி கெமராக்கள், அதற்குரிய உபகரணங்கள் மற்றும் கூலர் (05) என்பவற்றை கையளித்துள்ளார். அதிபர் எஸ்.சாகிதீன் தலைமையில்இந்நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

எப்.முபாரக்




## வீதி நூலகம் திறந்து வைப்பு

இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவை மேலும் மேம்படுத்தும் வகையில் பாகிஸ்தான் மக்களின் சார்பாக இலங்கையின் இரண்டாவது வீதி நூலகம் கண்டியில் புதன்கிழமை (05) திறந்து வைக்கப்பட்டது. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் புத்தகங்கள் இந்நூலகத்தில் காணப்படும்.



இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வுநிலை) உமர் பாரூக் பர்க்கி மற்றும் கண்டி மாநகர சபையின் ஆணையாளர் ஆகியோர் இணைந்து நூலகத்தை ஆரம்பித்ததுடன் அதனைத் தொடர்ந்து நூலக நிர்வாகத்தின் ஆவணத்தில் கையொப்பமிட்டனர்.

## சந்திப்பு



தமிழ்நாட்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினினை, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சந்தித்தார். இலங்கை நாட்டின் பொருளாதாரம் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

## பரிசளிப்பு

கல்வி அமைச்சில் ஊழியர்கள் மத்தியிலான விளையாட்டு போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதிகளாக கலந்துகொண்ட கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் ஆகியோர் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கினர்.

## நீர் விநியோகத் திட்டம்




சுமார் 25 இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பூநொச்சிமுனை மீனவர்களுக்கான நீர் விநியோகத் திட்டம் புதன்கிழமை (05) ஆரம்பித்து வைக்கப்பட்டது. பூநொச்சிமுனை அல்பரக்கத் கிராம மீனவர் சங்கத்தின் செயலாளரும் சமூக செயற்பாட்டாளருமான எம். வை.ஆதம்லெவ்வை தலைமையில் இந்த திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

எம் எஸ் எம் நூர்தீன்



## அடிக்கல் நடும் நிகழ்வு

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான சௌபாக்கியா வீடமைப்பு திட்டத்தின் கீழ் பிரதேச செயலக சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 06 வீடுகளுக்கான 750,000 ரூபாய் பெறுமதியான 03 வீடுகளுக்கும் , 250,000 ரூபாய் பெறுமதியான 03 வீடுகளுக்கும் அடிக்கல் நடும் நிகழ்வு புதன்கிழமை (05) இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபரின் நெறிப்படுத்தலிலும், சமுர்த்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீமின் தலைமையிலும் இந்நிகழ்வு நடைபெற்றது.

நூருல் ஹுதா உமர்

# மூலப்பொருட்களின் விலை குறைந்தாலும் முடிவு கசக்கிறது

மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு இன்றியமையாதது. பழங்காலத்தில் பச்சையாக உண்ட மனிதன் காலப்போக்கில் உணவை சமைத்து உண்ணப் பழகிக் கொண்டான். தற்போது உணவு சமைப்பதற்கு எரிவாயு அடுப்பு. மின் அடுப்பு மற்றும் சூட்டுக்கலம் போன்ற நவீன வசதிகளுக்கு மக்கள் தம்மைப் பழக்கிக் கொண்டுள்ளனர்.

கடையில் கொள்வனவு செய்து உண்ணும் உணவுப் பொருட்களின் விலைகள் அண்மைக் காலங்களில் பெரிதும் அதிகரித்திருந்தன. குறிப்பாக நாட்டின் பணவீக்கம் அதிகரித்து, எரிபொருள், எரிவாயு விலைகள் பெருமளவில் அதிகரித்திருந்த நிலையில், இந்த விலை உயர்வு மேற்கொள்ளப்பட்டது.

கடந்த ஆண்டில் கடும் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டு, மீண்டும் சந்தையில் விற்பனை வழமைக்கு திரும்பிய நிலையில் 12.5 கிலோகிராம் எடை கொண்ட எரி வாயு சிலிண்டரின் விலை 6850 ரூபாய் வரை விற்பனையாகியது. தற்போது இந்த விலை படிப்படியாக குறைக்கப்பட்டு அதன் அரை விலைக்கு அதாவது 3000 ரூபாய்க்கு குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

இவ்வாறிருக்கையில், கொத்து மற்றும் பிரைட் ரைஸ் விலைகள் பத்து சதவீதம் குறைக்கப்படுவதாக அகில இலங்கை உணவக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்திருந்தார். இந்த அறிவிப்புகள் ஊடகங்களில் பரவலாக பேசப்பட்ட போதிலும், கடைகளில் அவை அமுலுக்கு வராமல் இருப்பதையே பல பகுதிகளில் காண முடிந்தது.

இவ்வாறான நிலையில், இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் சகல உணவகங்களும் தமது உணவுப் பொருட்களின் விலைகளை காட்சிப்படுத்த வேண்டும் எனும் ஒரு முறைமை பின்பற்றப்பட்டால், தாம் உண்ணும் உணவின் பெறுமதியை அறிந்து கொண்டு அதனை நுகரக்கூடிய நிலை நுகர்வோருக்கு ஏற்படும்.

வெளிநாடுகளில் உணவகங்களில் உணவுப் பொருட்களின் விலைகள் கடைகளின் வாயில் பகுதிகளில் காட்சிப்படுத்தப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான முறை இலங்கையிலும் ஒரு சில உணவகங்களில் பின்பற்றப்படுகின்றன.

இந்த முறைமை அனைத்து உணவகங்களிலும் பின்பற்றப்படுமானால் அது வரவேற்கத்தக்கது. நுகர்வோரை அசௌகரியப்படுத்தும் வகையில் அளவுக்கதிகமாக உணவுப் பொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்டு விற்பனை செய்யப்படுவது தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகார சபையும் பெருமளவில் கண்டு கொள்வதில்லை.

அண்மையில் நுகர்வோர் விவகார அதிகார சபை முன்னெடுத்த குறிப்பிடத்தக்க ஒரு செயற்பாடாக, கொழும்பு நகரில் காலாவதியான இனிப்புப் பண்டங்கள் விற்பனையை சுற்றி வளைத்திருந்ததை குறிப்பிடலாம். கொழும்பு நகரை அண்மித்து, தொழில் மற்றும் கல்வி போன்றவற்றில் ஈடுபடுவதற்காக பிற மாவட்டங்களிலிருந்து வருகை தந்து தங்கியிருக்கும் மக்களுக்கு உணவகங்களில் உணவு உட்கொள்வது என்பது தவிர்க்க முடியாத விடயமாக அமைந்துள்ளது.

இவ்வாறிருக்கையில் மூலப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்ட போதிலும், தொடர்ந்தும் அதிகரிக்கப்பட்ட விலைகளில் உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் உணவகங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புகள் கவனம் செலுத்துமா?




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

போருக்குப் போகும் மாவீரர்கள் போல, எதையும் சிந்திக்காமல் சூடான வார்த்தைகளைத் தமக்குப் பிடிக்காதவர்களிடம் அள்ளிவீசுவதுண்டு.

கோபம் ஒருவரை எல்லை மீறும் உணர்வுக்குள் வசப்படுத்திவிடுகின்றது. சினம் ஏற்படுவது இயல்பானது. அதற்காகத் தன்னை மறந்து, தகாத வார்த்தைகளைப் பேசும்போது, அதைக் கேட்ட நபரும் அம்பு போல் பாய்கின்றார்.

ஒரு கணம் அமைதியாகச் சந்தித்தால், சினம் அடங்கிவிடும். மனிதனை மனிதன் வெறுத்தல் தகாது. பிடிக்காதவரிடம் பேசாமல் ஒதுங்குவது நல்லது.

நியாயத்தை எவரும் நிராகரிக்கும் போது, இயல்பான கோபம் வருவதுண்டு. இதற்காகக் கெட்டவர்கள் எல்லோரிடமும் மோத முடியாது.

தவறான நடத்தை உள்ளவர்கள், அதன் பிரதிபலனை பெற்றே தீருவார்கள். குரோதம் ஒருபோதும் சந்தோசங்களை உணராது.; அறிவைக் கெடுக்கும். பிறரின் தூற்றுதலுக்கு ஆளாவார்கள்.

வாழும் காலம் பொன்னானது. எனவே, நல்ல வழியில் வாழ்ந்தால், அதுவே நிரந்தர நிம்மதியை அளிக்கும். சினம், நற்குணம் அறியாது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

### கறுப்பு ஜூலையின் நாற்பதாண்டுகளின் பின் 8:

# 1883 இல் இருந்து 1915யை நோக்கி



தெ. ஞானசீர்த்தி மீநிலங்கோ

1883 கலவரத்தின் தொடர்ச்சியான நிகழ்வுகள் மதம் இலங்கை அரசியலில் தவிர்க்கவியலாத பங்கை வகிக்கப் போகிறது என்பதைக் கட்டியங் கூறியது. 1883 கலவரம் சிங்கள பௌத்தர்களுக்கு புதிய உற்சாகத்தைக் கொடுத்தது. அதேவேளை ரோமன் கத்தோலிக்கர்கள் கடும் ஆத்திரமூட்டலுக்கு உள்ளான போதிலும், அவர்கள் எந்தவிதமான பழிவாங்கும் நடவடிக்கைகளையும் எடுக்க தயாராக இல்லை. அவ்வாறான ஒரு கடும்போக்கை எடுக்கத் தேவாலயங்கள் தயாராக இருக்கவில்லை. இந்த விடயத்தில் கத்தோலிக்க பாதிரியார்களின் முன்மாதிரியான நடத்தை பாராட்டப்பட வேண்டியது. இப்பாதிரிமார்களில் பெரும்பாலானோர் வெளிநாட்டினராக இருந்தமையால் அவர்கள் இந்த பிரச்சினைகளை பூர்வீக மக்களைப் போலவே உணர்ச்சியுடன் பார்க்க முனையவில்லை. இது விரோத உணர்வுகளை நிறுத்துவதற்கு பங்களித்தது.

மறுபுறம் பௌத்தத்தை புதிய வழியில் வடிவமைத்து வன்முறை நோக்கில் முன்னெடுக்கின்ற போக்குக்கு பெரும்பான்மையான பௌத்த மதகுருமார்களிடமிருந்து வாய்மொழி ஆதரவு கூடக் கிடைக்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்டுதல் முக்கியமானது. ஆனால் அமைதியைப் போதித்த புத்த பகவானின் வழியில் நடப்பதாகக் காட்டிக்கொண்டோர் வன்முறைக்கும் ஆத்திரமூட்டல்களுக்கும் ஆதரவு தந்தனர். இவ்வகைப்பட்ட அதிதீவிர நிலைப்பாடுகளை முன்மொழிந்த பௌத்த குருமாருக்கு மக்கள் மத்தியில் ஆதரவு இருந்தது. அந்த ஆதரவுத் தளத்தின் அடிநாதமாக இருந்தது வளர்ச்சியடைந்து வந்த சிங்கள வர்த்தக சமூகமாகும்.

அவர்கள் பௌத்தத்தின் நிழலில் தமது வியாபார எதிரிகளைக் குறிவைத்தார்கள். மறுபுறம் மையநீரோட்ட பௌத்தத்தின் ஆதரவு கிடைக்காத அதிதீவிர பிக்குகளுக்கு இந்த வியாபாரிகளின் ஆதரவு தேவையானதாக இருந்தது. 'அதிதீவிர பௌத்த பிக்குகள் - சிங்கள பௌத்த வியாபாரிகள்' என்ற கூட்டணி மெதுமெதுவாக சிங்கள சமூகத்தில் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. இது மிகவும் முக்கியமானது.

எழுச்சிபெற்றுவந்த ஒரு சிங்கள பௌத்த முதலாளி வர்க்கத்தின் தேவைகட்கமையவே, மிஷனரிச் செயற்பாடுகட்கு எதிர்வினையான ஒரு அரசியல் சக்தியாக பௌத்தம் வடிவமைக்கப்பட்டது. புரட்டஸ்தாந்து கிறிஸ்துவ சமூகத்தைவிடப் பொருளாதாரத்திலும் கல்வியிலும் பினதங்கியிருந்த ஆனால் எண்ணிக்கையிற் பெரிதான கத்தோலிக்க கிறிஸ்துவ சமூகம் எச்சரிப்புடையதாயிற்று. டச்சு ஆட்சிக் காலத்தில் கடுமையான மதப் பாரபட்சத்துக்குட்பட்ட கத்தோலிக்க சமூகம், வத்திக்கானால் வழிநடத்தப்பட்ட, இடதுசாரி விரோதச் சிந்தனையின்; கோட்டையாயிருந்த கத்தோலிக்கத் திருச்சபையின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டிருந்தது.

கொச்சிக்கடை கலவரம் நிகழ்ந்து ஒரு தசாப்தக காலத்தில் இலங்கையின் முதலாவது நிறுவனமயப்பட்ட வேலைநிறுத்தம் நிகழ்ந்தது. 1893 செப்றெம்பரில் கேவ் அன் கம்பனியின் அச்சுத் தொழிலாளர் நடத்திய போராட்டம் தோற்கடிக்கப்பட்டாலும் அச்சுத் தொழிலாளரின் தொழிற் சங்கம் ஒன்று உருவானது. முற்போக்கான கத்தோலிக்கர்கள் உட்படப் பலவேறு சீர்திருத்தவாதிகளது ஆதரவு தொழிலாளர்களுக்குக் கிட்டியது. எனினும் அந்தத் தொழிற் சங்க அமைப்பு நின்று நிலைக்கவில்லை. சுயாதீனக் கத்தோலிக்கன் (இன்டிபென்டன்ற் கத்தலிக்) எனும் முற்போக்கான வார ஏடு தவிர்ந்த, முக்கியமான பத்திரிகைகள் அனைத்துமே அச்சுத் தொழிலாளர்களது போராட்டத்தை வன்மையாகக் கண்டித்தன. போராட்டம் தோல்வி அடைந்தாலும் அது புதிய அரசியற் சிந்தனைகளைச் கிளறி விட்டது. சட்டவாக்கற் சபையில் உண்மையான பிரதிநிதித்துவம் இல்லாமை பற்றிய கேள்வியைச் சுயாதீனக் கத்தோலிக்கன் ஏடு எழுப்பியது. கத்தோலிக்கத் திருச்சபையின் எதிர்ப்பிற்கும் நடுவே, அந்த ஏடு தொழிலாளர்கட்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளைக் கேள்விக்குட்படுத்தியது. தொழிலாளர்களுக்கு கத்தோலிக்க சமூகத்தின் பரவலான ஆதரவு இருந்ததும் குறிப்பிடத்தக்கது. 1896 ஜூலையில் கொழும்பில் தொடங்கிய சலவைத் தொழிலாளரின் வேலை நிறுத்தமானது மூன்று வாரங்களாக மிகப் பெரும் ஒற்றுமையுடன் நடந்தது. அதேயாண்டு நிகழ்ந்த யாழ்ப்பாணச் சுருட்டுத் தொழிலாளரது வேலை நிறுத்தம் முக்கியமானது. இவ்வாறான வேலை நிறுத்தங்கள் மதரீதியாகக் கூர்மையடைந்து வந்த முரண்பாடுகளுக்கு தற்காலிக இடையீட்டைச் செய்தன.

1883இல் நிகழ்ந்த பௌத்தர்களுடனான ஒரு மோதலையடுத்துக், கத்தோலிக்க சமூகம், பெரிதும் சிங்கள-பௌத்தர்களைக் கொண்டதொரு சூழலுக்குத் தன்னைத் தகவமைத்துக் கொண்டது. மேற்குக் கரைப்பகுதியில் வாழ்ந்த கத்தோலிக்கர்களிற் பெரும்பாலோரைத் தமிழுக்குப் பதிலாகச் சிங்களத்தைத் தமது வீட்டுமொழியாக்குமாறு திருச்சபை தூண்டியது. இதன் விளைவுகள் மிகப் பாரதூரமானவை. தமிழ் மட்டுமே பேசியவர்களின் குழந்தைகள் சிங்களக் கிறிஸ்தவர்களாகினர். நீர்கொழும்பு முதல் சிலாபம் புத்தளம் வரை இந்த மாற்றம் நிகழ்ந்தது. இலங்கையின் தேசிய இனப் பிரச்சனை புதிய கட்டத்தை நோக்கி நகரத் தொடங்கியதில் இருந்து - 1970களிலிருந்து - கத்தோலிக்க சமூகம் மொழி அடிப்படையில் ஆழப் பிளவுண்டது. அதேவேளை, சிங்களக் கத்தோலிக்கரிடையே, தேர்தல் அரசியலில் மதம் குறிப்பிடத்தக்க பங்கு வகித்துள்ளது. புரட்டஸ்தாந்து கிறிஸ்துவர்களிற் பெருவாரியானோர் பிரித்தானிய ஆட்சியின்போது சுயமுன்னேற்றத்துக்காகக் கிறிஸ்துவர் ஆகியோராவர். எனவே, அரசியல் லாபத்துக்காகப் பௌத்தத்துக்கு மீள்வது அச் சமூகத்தின் தலைமை உறுப்பினர்கட்கு எளிதாக இருந்தது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சிங்கள-பௌத்த தேசியவாதத்தின் தோற்றத்தில் கொச்சிக்கடைக் கலவரத்திற்கு முக்கிய பங்குண்டு. இக்கலவரம் பொதுவான சிங்கள-கத்தோலிக்க சமூகங்கள் இடையிலான மோதலாக விருத்தி பெறாமைக்கு சிங்கள-பௌத்த தேசியவாதம் ஒரு அரசியல் சக்தியாக வளர்ந்திராமை ஒரு காரணமாகும். ஏனெனில் உயர்வர்க்க சிங்கள-பௌத்த தலைவர்கள் எனப்பட்டோரின் வர்க்க நலன்கட்கு கத்தோலிக்கர்கள் ஒரு மிரட்டலாக இருக்கவில்லை. ஆனால் வர்த்தகப் போட்டியை மத முரண்பாடாக மடைமாற்றவியலும் என்பதை கொச்சிக்கடைக் கலவரம் காட்டி நின்றது. இதன் தொடர்ச்சியே 1915இல் நடந்த கலவரமாகும்.

பிரித்தானியக் கொலனியாதிக்கத்தின் கீழ் செல்வாக்குடன் விளங்கிய சிங்கள வர்த்தகர்களுக்கு போட்டியாக முஸ்லீம்கள் இருந்தனர். அதிலும் குறிப்பாக கரையோரச் சோனகர் என்று குறிப்பிடப்பட்டுப் பின்பு இந்தியச் சோனகர் என்று அழைக்கப்பட்ட, பெரும்பாலுந் தமிழ் பேசுவோரான, இந்திய முஸ்லிம்கள் வர்த்தகத்தில் வினைத்திறனுடன் இயங்கி வந்தார்கள். பலசரக்கு, துணிமணிகள் போன்று பல வணிகத் துறைகளிலும் அவர்கள் பங்குபற்றினர். எழுச்சி பெற்று வந்த கரையோரச் சிங்கள வர்த்தகர்கள் முஸ்லிம் வர்த்தகர்கள் போலத் தைரியமாகக் கடனுக்குப் பொருட்களை விற்க ஆயத்தமாக இல்லாததால் முஸ்லிம்களுடன் போட்டியிடுவது கடினமாகவே இருந்தது. எனவே முஸ்லிம் வணிகர்கட்கு எதிராக மதம் என்ற ஆயுதம் பயன்படுத்தப்பட்டது.

முஸ்லிம்களையும் தமிழரையும் அந்நியர்களாகப் பார்க்கிற போக்கு அநகாரிக தர்மபாலாவின் காலத்திலிருந்து ஊக்குவிக்கப் பட்டது. அது ஒரு அரசியற் கொள்கையாகிப் பேரினவாத வெறி ஆவதற்கு வாய்ப்பான சூழ்நிலை அப்போது இல்லை. அதை முன்னெடுத்துச் செல்லக் கூடிய ஒரு நடுத்தர வர்க்கம் அன்று உருவாகி இருக்கவும் இல்லை. எனினும் 1914இல் முதலாம் உலகப் போர் எனப்படுகிற ஐரோப்பிய நாடுகளின் போர் வெடித்ததை அடுத்து இலங்கையின் பொருளாதாரம் பாதிப்படைந்தது. இது சமூகங்களுக்கு இடையிலான முரண்பாட்டுக்கு புதிய பரிமாணத்தை அளித்தது.

சில்லறை வியாபாரிகள் கடனுக்குப் பொருட்களை விற்கும் போது விலைகளைக் கூட்டி விற்பது வழமையான சூழ்நிலைகளில் வாங்குவோருக்குப் பாரிய பிரச்சனையாய் இருப்பதில்லை. அது போலவே சில்லறை வணிகர்கள் வட்டிக்குக் கடன் கொடுப்பதும் கடுமையான பொருளாதார நெருக்கடி இல்லாத போது ஒரு வசதியாகவே கருதப் படுகிறது. எனினும் ஒரு சமூகம் கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்குகிற போது இவை வியாபாரிகட்கு எதிராக மட்டுமன்றி ஒரு சமூகத்திற்கு எதிரானதாகவே கூட மாறலாம். இலங்கையில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முஸ்லீம்கள் இலக்காகவதற்கு பொருளாதார நெருக்கடி ஒரு முக்கிய காரணியானது.

1941ஆம் ஆண்டு போர் தொடங்கியதை அடுத்துப் பொருளாதாரத்திற் சரிவு ஏற்பட்டதுடன் பண்டங்கட்கான தட்டுப்பாடும் நிலவியது. இச் சூழலில் அதிருப்தி பல வேறு வடிவங்களில் வெளிப் பட்டது. ஒரு பகுதி கொலனிய நிருவாகத்தினருக்கு எதிரான சிங்கள தேசியவாத எழுச்சியாக இருந்தது. நூற்றாண்டுகள் முன் இழந்து போன சிங்கள இராச்சியத்தை மீட்பது பற்றிய கருத்துக்களும் சில பத்திரிகைகள் வாயிலாக வெளிப் பட்டன. இன்னொரு புறம் வேலை இன்மையும் விலைவாசி உயர்வும் எழுந்தமான முறையில் வேலை நிறுத்தங்கட்கு வழி கோலின. பொருளாதார நெருக்கடி, குறிப்பாகப் பொருட்களுக்கான தட்டுப் பாடும் விலைகளின் உயர்வும், வியாபாரிகட்கு எதிரான உணர்வாக, அதிலும் முஸ்லிம் வியாபரிகட்கு எதிரான பகைமையாக வளருவது எளிதாய் இருந்தது. இதை சிங்கள பௌத்த வர்த்தக நலன்கள் தங்களுக்கு வாய்ப்பாக்கின.

## கடிதங்கள்

### 250 ஏக்கர் வேளாண்மை பாதிப்பு

திருகோணமலை - சேருநுவர பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தில்லக்குழி, புளியங்குளம் போன்ற வேளாண்மை வெளிகளில் செய்கைபண்ணப்பட்ட சுமார் 250 ஏக்கர் வேளாண்மை நீரின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

RB வாய்க்காலை நம்பித்தான் வேளாண்மை செய்தோம். தற்போது வாய்க்காலில் தண்ணீர் இல்லாமையால் வேளாண்மைகக் கருகி போயுள்ளதால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிக்கின்றனர்.

நாங்கள் கஷ்டப்பட்ட ஏழைகள். எங்களது தொழில் வேளாண்மைச் செய்கை மாத்திரம்தான்.வேறு தொழில் எங்களுக்கு இல்லை.இப்படி இருந்தும் சிறுபோக வேளாண்மை செய்தும் வேளாண்மைக்கு நீர் இல்லா விட்டால் நாங்கள் எங்கே போவர் என்றும் கேள்வியெழுப்பினர்.

கடந்த பெரும்போகத்தின்போது மஞ்சல் நோயினால் பாதிக்கப்பட்டு நஷ்டமடைந்தோம்.இம்முறை வேளாண்மைக்கு தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகின்றோம்.கடன்பட்டு வேளாண்மை செய்தும் தமது செய்கையை கைவிட வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளோம்.

இதுவிடயத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு தமக்கு நீரினை விரைவாக வழங்குவதற்கும், பாதிக்கப்பட்டோருக்கு நஷ்ட ஈட்டினை தருவதற்கும் ஆவண செய்ய வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர்.

தீஷான் அஹமட்






# தேன் [THEAN MOVIE]




சந்திரகுமார் யதுஷினி
யாழ்ப்பாண
பல்கலைக்கழகம்
ஊடக கற்கைகள்
துறை


கும்கி, மேற்குத் தொடர்ச்சி மலை போன்று தேன் திரைப்படம் ஒரு மலைக்கிராமப் படமாக அமைகிறது. அம்பலவாணர் தயாரிப்பில் தகராறு, வீர சிவாஜி போன்ற படங்களை இயக்கிய கணேஷ் விநாயக் (கணேஷ் விநாயகன்) இயக்கத்தில் தருண் குமார், அபர்ணதி, அனுஶ்ரீ, அருள் தாஸ், பாவாலக்ஷ்மன் போன்றோர்கள் பிராதான மற்றும் துணைப்பாத்திரங்களில் நடித்திருக்கின்ற இத் திரைப்படம் 2021 இல் வெளிவந்த இந்திய தமிழ்த் திரைப்படமாகும்.

தேன் விற்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மலைக் கிராமத்தைச் சேர்ந்த கல்வி கற்காத ஒரு நபரின் வாழ்க்கை மற்றும் அவர் மீது இந்த சமுதாயம் சுமத்துகின்ற சுமைகளையும், பிரச்சினைகளையும் அவர் எப்படி எதிர்த்து போராடுகின்றார் என்ற கருப்பொருளைச் சுற்றி கதை பயணிக்கிறது. இதற்கு தேன் படத்தில் வரக்கூடிய வேலுவினதும், பூங்கொடியினதும் காதலை ஒருவரிக் கதையாக்கி அவர்களுடைய காதல் வாழ்வில் நடக்கக் கூடிய நிகழ்வுகளினூடாக மலைக் கிராமங்களில் வாழுகின்ற மக்களுடைய அவலம், வாழ்வியல் என்பவற்றை எடுத்துக்காட்டுகின்ற முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார் இயக்குநர் விநாயக் அவர்கள்.

மலைக் கிராமம், வைத்தியசாலை, அரச அலுவலகங்கள் என்பவற்றை மையப்படுத்தியதாக நகர்ந்து செல்லும் இத் திரைப்படத்தினுடைய கதைக்களம் மிக எளிமையாக அமைக்கப்பட்டிருப்பதோடு படம் முழுவதும் கதைக்களத்தோடு சேர்ந்து பயணிப்பது போன்ற மன உணர்வைத் தருகிறது. குறிப்பாக இதற்கு சுகுமார் அவர்களுடைய ஒளிப்பதிவு பெரிதும் உதவியிருக்கின்றது. மலைக்கிராமத்தினுடைய இயற்கை அழகை மேலிருந்து கீழ் நோக்கிய கேமரா கோணம், தூரமான கேமரா கோணம், இடைநிலை கேமரா கோணம் என்ற ரீதியில் உள்வாங்கி தேவைக்கு அதிகமாகவே அழகாக காட்சிப்படுத்தியிருக்கிறார்.

மலையிலிருந்து அருவி கீழே வழிந்தோடும் காட்சி, மலைச் சூழல் என்பன இயற்கையை நேரில் இரசிப்பது போன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளதோடு, பாத்திரங்களினுடைய உணர்வு *Closeup shot* மூலம் எடுக்கப்பட்டுள்ளது. தேன் திரைப்படத்தில் கதாப்பாத்திரங்கள் ஒவ்வொன்றுமே அப்பாத்திரங்களாகவே வாழ்ந்து இருக்கிறார்கள் என்று கூறும் அளவிற்கு யதார்த்தமான ஒரு இயல்பான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். தன்னை அடையாளப்படுத்திக்கொள்ள ஒரு அடையாள அட்டை வேண்டுமென்று தெரியாமல் இருக்கின்ற அறியாமை, அரச அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படும் போது வருகின்ற ஏமாற்றம், மகள் மனைவி மீது கொண்ட அன்பு என்பவற்றை வெளிப்படுத்தும் வேலுப்பாத்திரமாக இருக்கட்டும், பசி, பாசம் என்பவற்றை உடல்மொழிகளால் வெளிப்படுத்தியிருக்கின்ற குழந்தைப்பாத்திரமாக இருக்கட்டும் நகைச்சுவையான அரசியல் வசனங்கள் மூலம் கவனம் ஈர்க்கின்ற பிச்சையெடுக்கின்ற பாத்திரத்தில் நடித்திருக்கின்ற பாவால க்ஷ்மணனின் நடிப்பாக இருக்கட்டும் மிகவும் இயல்பானதாக அமைகிறது.

வைத்தியசாலையில் உணவு வழங்குகையில் 'பாத்திரம் இல்லையா பாப்பா?' எனக் கேட்கும்போது அதற்கு வாய் பேச முடியாத குழந்தைப்பாத்திரம் வெளிப்படுத்துகின்ற நடிப்பு, காசு இல்லாத இறுதிக்கட்டத்தில் வேலுவும், அவனுடைய குழந்தையும் வெளிப்படுத்துகின்ற நடிப்பு போன்றன நெஞ்சை உலுக்கும் விதமாகக் காட்சிப்படுத்தப்பட்டிருப்பது, மனதிலே ஆழமான எண்ண அலைகளைத் தோற்றுவிக்கிறது.

கதாபாத்திரங்களின் நடிப்போடும், இயற்கையின் அழகோடும் ஒன்றித்துப் போக வைக்கிறது பரத்வாஜ் அவர்களுடைய இசை. 'அல்லிப்பூ நிறத்தழகி ஆராவாரம் பூ




அழகி காணலியே காணலியே' , 'உசுரையே உலுக்குதே' என வருகின்ற பாடல்கள் என்பன மனதைத் தொடுமளவுக்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. கிசோரினுடைய எடிட்டிங் மேற்குத்தொடர்ச்சி மலையில் கவனம் ஈர்த்த இராசிதங்கதுரையினுடைய வசனங்களும் இத்திரைப்படத்துக்கு வலுச்சேர்த்துள்ளன.

எதிர்பாராத திருப்பங்களோடு இனி மலையில் என்ன நடக்கப்போகிறது என்ற எதிர்பார்ப்பை பார்வையாளர்களிடமும் விட்டு இருக்கின்ற இந்த திரைப்படத்தினுடைய திறந்த முடிவானது (*Open Ending*) உண்மையில் நடந்த சில சம்பவங்களை மையப்படுத்தியதாக அமைக்கப்பட்டுள்ளது. மலையில் வாழுகின்ற மக்களுடைய பிரச்சினைகளைப் பேச வந்த இயக்குனர் அவர்களுடைய வாழ்க்கை, அதிகாரிகளினுடைய அலட்சியம், இயற்கை வளங்கள் சூறையாடப்படுவது, நலத்திட்ட உதவிகள் வழங்கப்படாமை என்பவற்றை இன்னும் காட்சிப்படுத்தியிருக்கலாமோ என்ற எண்ணமும் காதல் மிகுந்து இருப்பதால் *Melodrama* அதிகமான போக்கும் மலையில் வாழுகின்ற மக்கள் பூங்கொடியினுடைய தந்தை போன்றவர்களுடைய காட்சிகள் ஒரு சில காட்சிகளுக்குப் பின் ஏன் வைக்கப்படவில்லை? என்ற கேள்வியும், எடிட்டிங்கில் ஆங்காங்கே காணப்படுகின்ற சறுக்கல்களும் தேன் திரைப்படத்தை சற்று தடுமாற வைக்கிறது. இருப்பினும் யதார்த்தத்தைப் பேசும் திரைப்படங்கள் வரிசையில் தேன் படமும் இடம்பிடித்துள்ளதோடு விருதுகளுக்காகவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பால்

# உண்மையில் மக்களுக்கு பாதிப்பில்லையா?




ச.சேகர்


நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கும், சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்படிக்கைக்கு அமைவாகவும், இலங்கை பெற்றுக் கொண்டுள்ள கடன்களை மறுசீரமைப்பு செய்ய வேண்டிய கடப்பாட்டிலுள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களை இவ்வாறு மறுசீரமைப்பு செய்ய வேண்டியுள்ள நிலையில், வெளிநாட்டு கடன்களை மறுசீரமைப்பு செய்வதற்காக உள்நாட்டு கடன் தொகையில் 17 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை மறுசீரமைப்பு செய்ய வேண்டிய நிலைக்கு முகங்கொடுத்திருந்தது.

அதன் பிரகாரம் கடந்த வாரம் இது தொடர்பில் மத்திய வங்கி, நிதி அமைச்சு ஆகியன அமைச்சரவைக்கு முன்மொழிவுகளை சமர்ப்பித்து, அதற்கான அனுமதியைப் பெறப்பட்டிருந்ததுடன், முதல் தடவையாக ஞாயிற்றுக் கிழமையும் பாராளுமன்றம் கூட்டப்பட்டு இந்த மறுசீரமைப்பு தொடர்பில் விசேட அனுமதியைப் பெறப்பட்டிருந்தது.

இந்த உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பல்வேறு தரப்பினர் தத்தமது ஊகங்களை வெளிப்படுத்தியிருந்த நிலையில், பொது மக்கள் மத்தியில் ஒருவித அச்ச உணர்வு தோற்றுவிக்கப்பட்டு, அதனால் வங்கிகளில் அவர்கள் பேணும் சேமிப்புகளை அளவுக்கதிகமாக அநாவசியமாக மீளப் பெறும் ஒரு நெருக்கடி நிலை தோற்றுவிக்கப்படுமோ எனக் கருதி, அவ்வாறான ஒரு சூழ்நிலை எழுவதை தவிர்ப்பதற்காக விசேட வங்கி விடுமுறை வழங்கப்பட்டு இந்த கடன் மறுசீரமைப்புக்கான அனுமதி கிடைக்கும் வரையில், ஐந்து நாட்களுக்கு வங்கிகள் மூடப்பட்டிருந்தன.

அரசாங்க தரப்பினர் இந்த உள்நாட்டு கடன் மறுசீரமைப்பால் வங்கிக் கணக்குகளுக்கு எவ்விதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை. அது போன்று ஊழியர் சேமலாப நிதிய மீதிக்கும் எவ்விதமான தாக்கமும் ஏற்படாது என உறுதி மொழி




வழங்கியிருந்தனர்.

ஊழியர் சேமலாப நிதியத்தின் சுமார் 90 சதவீதமான முதலீடுகள் அரசாங்கத்தின் பிணைமுறிகளிலும், கடன் பத்திரங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அபிவிருத்தியடைந்த நாடுகளைப் போலன்றி, இலங்கையில் அரசாங்க பிணைமுறிகள் மற்றும் கடன் பத்திரங்கள் அதிகளவு இடர்கள் நிறைந்த முதலீட்டு மூலங்களாக அமைந்துள்ளன. நாம் தனிப்பட்ட ரீதியில் எம்மிடம் காணப்படும் சேமிப்புகளை முதலீடு செய்து வருமானத்தைப் பெற்றுக் கொள்வது தொடர்பான தீர்மானமொன்றை மேற்கொள்ளும் முன்னர், நாம் தெரிவு செய்யும் முதலீட்டு மூலம் தொடர்பில் ஓரளவேனும் ஆராய்வதுண்டு. ஆனால், இலங்கையில் ஊழியர் சேமலாப நிதியத்தில் பங்களிப்புச் செய்வோரிடமிருந்து அவர்களின் பங்களிப்புப் பணத்தை எவ்வாறான மூலங்களில் முதலிட வேண்டும் என்பது தொடர்பான எவ்விதமான கருத்துக் கேட்டல்களும் மேற்கொள்ளப்படுவதில்லை. இவ்வாறான நடைமுறை அமெரிக்கா போன்ற நாடுகளில் அமுலிலுள்ளது.

சரி, இலங்கையில் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பினால், ஊழியர் சேமலாப நிதிய மீதிக்கு ஏதேனும் வகையில் தாக்கம் ஏற்படும் என்பதை அனுமானிக்க முடிகின்றது. குறிப்பாக, கடந்த ஒரு சில வருட காலப்பகுதியில் நிலவிய 25 ▯ 30 சதவீதம் எனும் உயர் வட்டி வீதங்களுக்கே அரச பிணைமுறிகளிலும், கடன் பத்திரங்களிலும் ஊழியர் சேமலாப நிதிய நிதி முதலீடு செய்யப்பட்டிருந்தது. அதுபோன்று, எதிர்வரும் சில ஆண்டுகளில் முதிர்வடையவுள்ள கடன்பத்திரங்கள் மற்றும் பிணைமுறிகளுக்கு செலுத்த வேண்டிய தொகையை மேலும் ஐந்து, பத்து வருடங்களுக்கு நீடிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்கையில் உயர் வட்டி வீதத்துக்கு பதிலாக 9 சதவீதம் எனும் குறைந்த வட்டியை உத்தரவாதமளிப்பதாக அறிவித்துள்ளமையினூடாக அந்த நிதியத்தின் இழப்பு உறுதி செய்யப்படுகின்றது.

ஊழியர் சேமலாப நிதியத்தில் ஊழியர்கள் மற்றும் தொழில் வழங்குநர்களின் பங்களிப்புச் செய்யும் தொகையை விட மீளப் பெறும் தொகை தற்போது குறைந்தளவில் காணப்படுகின்றது. இதனால், அதன் பாதிப்பு உடனடியாக சாதாரண மக்களுக்கு தென்படுவதில்லை. எவ்வாறாயினும், அண்மைய பணவீக்க நிலையுடன் ஒப்பிடுகையில், 9 சதவீத வட்டி வழங்கப்படுவது என்பது காலப்போக்கில் அந்த நிதியத்தில் காணப்படும் மீதியின் பெறுமதி குறைவடைந்துவிடுவதையே உணர்த்துகின்றது.

எவ்வாறாயினும் இந்த மறுசீரமைப்பு தொடர்பில் ஊழியர் சேமலாப நிதியத்தைச் சேர்ந்தவர்களால் மறுப்பு அல்லது மாற்று வழிமுறைகளை சமர்ப்பிப்பதற்கு மூன்று வாரங்கள் வரை அவகாசம் காணப்படுகின்ற நிலையில், இந்த நிதியத்தின் உரிமையாளர்களாக திகழும் பங்களிப்பு வழங்குவோரின் அனுமதியின்றி அந்த நிதியம் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொண்டுள்ளமை தொடர்பில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமா என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

# செலிங்கோ லைஃப் வாடிக்கையாளர்கள் போனஸ்

வருடாந்த போனஸ் கொடுப்பனவாக செலிங்கோ லைஃப் தனது ஆயுள் காப்புறுதி வாடிக்கையாளர்கள் மத்தியில் 6 பில்லியன் ரூபாய்களைப் பகிர்ந்தளித்துள்ளது. இதில் கம்பனியின் விசுவாசம் மிக்க 197,131 வாடிக்கையாளர்களுக்கு கம்பனியின் 35 வருட நிறைவைக் குறிக்கும் வகையில் வழங்கப்பட்டுள்ள விஷேட போனஸ் கொடுப்பனவும் அடங்கும்.

இது 2021ம் ஆண்டு பிரகடனம் செய்யப்பட்ட போனஸ் தொகையை விட 1.7 பில்லியன் ரூபா அல்லது 37.27 வீதம் அதிகமானதாகும். அண்மைய இந்தக் கொடுப்பனவானது கம்பனியின் வளர்ச்சி மற்றும் ஸ்திரப்பாடு என்பனவற்றைப் பிரதிபலிக்கின்றது. மேலும் இது, 2022ல் 19 வருடங்களாக தொடர்ச்சியான தனது சந்தை தலைமைத்துவத்தை தக்கவைத்திருக்கும் செலிங்கோ லைஃப், வாடிக்கையாளர்கள் அடையும் வெற்றிகரமான நன்மைகளுக்கான இன்னொரு உதாரணமாகவும் அமைந்துள்ளது என்று கம்பனி அறிவித்துள்ளது.

'இவ்வாறான சவால் மிக்க சந்தர்ப்பங்களில் எமது போனஸ் கொடுப்பனவின் கணிசமான அதிகரிப்பு கம்பனியின் முதலீட்டு முகாமைத்துவத்தின் திறன் ஆழத்தை கோடிட்டுக் காட்டுகின்றது. அதுமட்டும் அன்றி இப்போதுள்ள வாடிக்கையாளர்களுக்கும் இனிமேல் இணைந்து கொள்ளவிருக்கும் வாடிக்கையாளர்களுக்கும் கணிசமான அளவு நம்பிக்கையை வளர்ப்பதாகவும் அது அமைந்துள்ளது' என்று கூறினார் செலிங்கோ லைஃப்பின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான துஷார ரணசிங்க. 'மேலும் இந்த போனஸ் தொகையானது காப்புறுதி ஒப்பந்ததுரொகளுக்கு உரிமை கோரலின் போது பெற்றுக் கொள்ளக் கூடிய மேலதிக பாதுகாப்பையும் அளிக்கின்றது' என்று அவர் மேலும் கூறினார்.

நிலைத்தன்மையை பேணும் வகையிலும் கடதாசி தொடர்பான பாவனைகளை குறைக்கும் வகையிலும் செலிங்கோ லைஃப் வருடாந்த போனஸ் சான்றிதழ்களை வழங்க ஈ கூற்று அல்லது குறுந்தகவல் போன்ற டிஜிட்டல் வழி தொடர்பாடலைப் பயன்படுத்தி உள்ளது. இந்தத் தொடர்பாடல் சாதியப்படாதவர்களுக்கு மட்டுமே சான்றிதழ்கள் தபால் வழியாக அனுப்பப்பட்டுள்ளன.

செலிங்கோ லைஃப், ரூ.191.5 பில்லியன் சொத்துக்கள், ரூ.45.63 பில்லியன் ஒருங்கிணைந்த வருமானம், மொத்த எழுத்து பிரீமியம் வருமானம் ரூ. 29.16 பில்லியன்;, ரூ.134.9 பில்லியன் ஆயுள் நிதி மற்றும் ரூ.165.9 பில்லியன் முதலீட்டுச் சேர்க்கை ஆகியவற்றுடன் 2022ஆம் ஆண்டினை நிறைவு செய்தது.

செலிங்கோ லைஃப், 'வருடத்திற்கான சிறந்த வர்த்தகநாமம்' மற்றும் 'வருடத்திற்கான சிறந்த சேவை வர்த்தகநாமம்' என இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தினால் (*SLIM*) தெரிவுசெய்யப்பட்டுள்ளதோடு 2022இல் *World Finance* நிறுவனத்தால் 'இலங்கையின் தலை சிறந்த ஆயுட் காப்புறுதியாளர்' என, தொடர்ந்து 9வது வருடமாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தனது 35 வருடகால இருப்பில் அரைப்பங்கிற்கும் அதிக காலப்பகுதியில் நாட்டின் முன்னணி ஆயுட்காப்பீட்டாளராக காணப்பட்டுவரும் செலிங்கோலைஃப், *Brand Finance* நிறுவனத்தினால் 'இலங்கையின் அதிஉயர் பெறுமதிமிக்க ஆயுட்காப்பீட்டு வர்த்தக நாமம்' என தரப்படுத்தப்பட்டுள்ளதோடு, 2022இல் 'சிறந்தபணித்தளம்' என்றசான்றினையும், தொடர்ந்து 3வது வருடமாகப் பெற்றுள்ளது. ஒருமில்லியனை அண்மித்த செயற்படு ஆயுட்காப்பீட்டு ஒப்பந்தங்களைக் கொண்டுள்ள செலிங்கோலைஃப், புத்தாக்கரீதியில் பாதுகாப்பான ஆயுட்காப்பீட்டுத் தீர்வுகளை வழங்குவதோடு தனது காப்புறுதிதாரர்களின் இலக்குகள் மற்றும் இலட்சியங்களுக்கான ஆபத்துத் தன்மையினையும் மட்டுப்படுத்துகின்றது.



மெக்சிகோ



# பள்ளத்தில் பஸ்; 27 பேர் பலி

மெக்சிகோவில், தெற்கு மாநிலமான ஒசாகாவில், மலைப்பாதையில் இருந்து பயணிகள் பேருந்து ஒன்று பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் குறைந்தது 27 பேர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புப் படையினர் விபத்தில் சிக்கியவர்களை மீட்டு வருகின்றனர். அப்போது, செங்குத்தான குன்றின் அடிப்பகுதியில் வாகனத்தின் சிதைந்த பாகங்கள் கிடப்பதாக தெரிவித்துள்னர்.

“முதற்கட்ட எண்ணிக்கையின்படி, 27 பேர் இறந்தனர் மற்றும் 17 காயமடைந்தவர்கள் மருத்துவ கவனிப்புக்காக பிராந்தியத்தில் உள்ள வெவ்வேறு மருத்துவமனைகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்” என்று ஒசாகா மாநில வழக்கறிஞர் பெர்னார்டோ ரோட்ரிக்ஸ் அலமில்லா தெரிவித்தார். மேலும், விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.



வீதியில் சென்ற பெண்ணிடம் நிர்வாணமாக அத்துமீறல்

பாகிஸ்தான் நாட்டின் கராச்சி மாகாணத்தில் ஜுலிஸ்தன் இ ஹகர் என்ற பகுதியில் இளைஞன் ஒருவர் தான் வந்த மோட்டார் சைக்கிளை வீதியோரம் நிறுத்தினார். தன் ஆடையை கலைந்து நிர்வாணமாகினார். .

இதனிடையே, அந்த தெருவில் உள்ள ஒரு பெண் பர்தா அணிந்தவாறு நடந்து சென்றுள்ளார். அப்போது, அந்த இளைஞன் நிர்வாணமாக அந்த பெண்ணை பின் தொடர்ந்து சென்றுள்ளான். பின்னர் திடீரென அந்த பெண்ணிடம் இளைஞன் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டான்.

இதனால் அதிர்ச்சியடைந்த அந்த பெண் இளைஞனை தாக்கிய நிலையில் அந்த இளைஞன் தனது ஆடையை அணிந்துகொண்டு வேகமாக மோட்டார் சைக்கிளில் புறப்பட்டு சென்றான். இந்த கொடூர சம்பவம் தொடர்பான வீடியோ சமூகவலைதளத்தில் வைரலான நிலையில் அந்த இளைஞன் யார் என்பது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அமெரிக்கா

## உலகின் மிகச் சிறிய குழந்தை

ஒரு குழந்தை பிறப்பதற்கு முன்பு 10 மாத காலம் தாயின் கருவறையில் இருக்கும். அந்த 10 மாதங்களில் குழந்தையின் உடல் உறுப்புகள், செயல் திறன் ஆகியவை வளர்ச்சி அடையும். அவ்வாறு முழுமையாக வளர்ச்சி அடையாமல் பிறக்கும் குழந்தைகள் குறை மாத குழந்தைகள் என அழைக்கப்படும்.

அவர்கள் மற்ற குழந்தைகளை விட சற்று குறைவான வளர்ச்சி மற்றும் செயலி திறன் கொண்டிருப்பர். அவ்வாறு 22 இரண்டு வாரங்களில் பிறந்த பெண் குழந்தை ஒன்று தற்போது நலமுடன் உள்ளது. அந்த குழந்தை எந்த வித பிரச்சனையும் இன்றி மற்ற குழந்தைகளை போலவே இயல்பாக இருப்பதால் அதை அதிசய குழந்தை என்கிறார்கள் மருத்துவர்கள். அமெரிக்காவின் கனெக்டிகட் மாகாணத்தில் உள்ள செயின்ட் பிரான்சிஸ் மருத்துவமனையில் விஷம் குடித்ததாக கூறி ஒரு கர்ப்பிணிப் பெண் அனுமதிக்கப்பட்டார். அவர் கடும் வயிற்று வலியால் அவதிப்பட்டு வந்த நிலையில் அவருக்கு பெப்ரவரி 22ம் திகதி காலை பெண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தையின் எடை 12.4 அவுன்ஸ் அதாவது 350 கிராம் மட்டுமே. இதை கண்ட மருத்துவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

ஒடிசா

## 800க்கு குழந்தையை விற்ற தம்பதி

ஒடிசா மாநிலம் மயூர்பஞ்ஜா மாவட்டத்தை சேர்ந்தவர்கள் கராமி முர்மு - முசு தம்பதியினர். முசு தமிழ்நாட்டில் வேலை செய்து வரும் நிலையில், கராமி முர்மு ஒடிசாவில் தனியாக வசித்து வருகிறார். இந்நிலையில் முர்முவுக்கு இரண்டாவது பெண் குழந்தை பிறந்துள்ளது. வறுமை காரணமாக அந்த குழந்தையை வளர்க்க முடியாது என்று நினைத்த அவர், குழந்தையை 800 ரூபாய்க்கு விற்றுள்ளார்.

இந்நிலையில் சொந்த ஊருக்கு வந்த கணவர் இரண்டாவது குழந்தை குறித்து முர்முவிடம் கேட்டுள்ளார். அதற்கு குழந்தை உயிரிழந்துவிட்டதாக அவர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் சந்தேகமடைந்த கணவர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். பொலிஸார் நடத்திய விசாரணையில் குழந்தை இல்லாத தம்பதிக்கு 800 ரூபாய்க்கு குழந்தை விற்கப்பட்டது தெரியவந்துள்ளது. இது தொடர்பாக குழந்தையின் தாய் கராமி முர்மு, குழந்தையை வாங்கிய தம்பதி மற்றும் அதற்கு ஏற்பாடு செய்த இடைத்தரகர் ஆகிய 4 பேரை பொலிஸார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ராய்ப்பூர்

## பலிகொடுத்த ஆட்டின் கண்ணால் பலியான நபர்

சத்தீஸ்கர் சுராஜ்பூர் மாவட்டம் மதன்பூர் கிராமத்தை சேர்ந்தவர் பகர் சாய் (வயது 50). இவர் தான் நினைத்தது நிறைவேறிவிட்டால் ஆட்டை பலி கொடுக்கிறேன் என்று தனது கடவுளிடம் வேண்டியுள்ளார்.

வேண்டுதல் நிறைவேறிய நிலையில் குடும்பத்தினர் மற்றும் கிராமத்தினருடன் மத வழிபாட்டு தலத்திற்கு சென்றுள்ளார். கடவுளுக்கு ஆட்டை பழிகொடுத்து வழிபாடு செய்துள்ளார்.

பலிகொடுக்கப்பட்ட ஆட்டை கிராமத்தினர் சமைத்துள்ளனர். இறைச்சி கறியை கிராமத்தினர் மத வழிபாட்டு தலத்தில் அமர்ந்து சாப்பிட்டுள்ளனர். பகர் சாய் தனது ஆட்டின் கண்ணை சாப்பிட்டுள்ளார். ஆட்டின் கண் தொண்டையில் சிக்கிக்கொண்டது. அவரால் மூச்சு விட முடியவில்லை. அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். பகர் சாயை பரிசோதித்த வைத்தியர்கள் அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக அறிவித்தனர்.



# ஓய்வு பெற்ற தமிம் இக்பால்



பங்களாதேஷின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான அணித்தலைவர் தமிம் இக்பால், சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

கடந்தாண்டு இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டிகளிலிருந்து 34 வயதான இக்பால் ஓய்வு பெற்ற நிலையில், இதுவரையில் 70 டெஸ்ட்களில் 38.89 என்ற சராசரியில் 5,134 ஓட்டங்களைப் பெற்றதோடு, 241 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 36.62 என்ற சராசரியில் 8,313 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.



## மன்னார் பிறிமியர் லீக் ஆரம்பமானது

எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் மன்னார் பிறீமியர் லீக்கின் இரண்டாவது பருவகாலமானது அண்மையில் ஆரம்பமானது.

குறித்த தொடரில் 12 கால்பந்தாட்டக் கழகங்களைச் சேர்ந்த 300 வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

ஆரம்ப நிகழ்வாக மன்னார் நகரத்தில் இருந்து கழகங்களைச் சேர்ந்த வீரர்கள், உரிமையாளர்கள், விருந்தினர்கள் ஊர்வலமாக சென்று மன்னார் பொது விளையாட்டு மைதானத்துக்கு அருகாமையில் வைக்கப்பட்டுள்ள தேசிய சாதனையாளர் அமரர் பியூஸ்லஸின் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி அங்கிருந்து வாகனம் பவனி ஊடாக ஜோசப்வாஸ் நகரில் அமைந்துள்ள முன்னாள் ஆயர் ராஜப்பு யோசேப்பு ஆண்டகை விளையாட்டு மைதானத்தை சென்றடைந்தனர். பின்னர் உரிமையாளர்கள் மற்றும் வீரர்கள் அறிமுகம் இடம் பெற்றது.

பின்னர் மின்னொளியில் நடைபெற்ற முதலாவது போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் லக்கி கால்பந்தாட்டக் கழகத்தை மாட்டிஸ் கால்பந்தாட்டக் கழகம் வென்றது.

தேசிய விளையாட்டு விழாவில்

## கிழக்கு மாகாண வீரர்கள் பிரகாசிப்பு



கியாஸ் ஷாபி

தேசிய விளையாட்டு விழாவில், கிரிக்கெட் மற்றும் கராத்தே போட்டிகளில் தங்கப் பதக்கங்களைப் சுவீகரித்து கிழக்கு மாகாண வீரர்கள் சாதனை படைத்துள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற ஆண்களுக்கான கிரிக்கெட்டில் தங்கப் பதக்கத்தையும் , பெண்களுக்கான கிரிக்கெட்டில் வெள்ளிப் பதக்கத்தையும் சுவீகரித்துக்கொண்ட கிழக்கு மாகாண அணியினர், கராத்தேயில் ஒரு தங்கப் பதக்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் மற்றும் ஒரு வெண்கல பதக்கம் உட்பட மொத்தமாக ஐந்து பதக்கங்களை கிழக்கு மாகாணம் சார்பாக பெற்றுக் கொண்டுள்ளனர்.

முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

## பங்களாதேஷை வென்ற ஆப்கானிஸ்தான்

பங்களாதேஷுக்கெதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் டக் வேர்த் லூயிஸ் முறைப்படி 17 ஓட்டங்களால் ஆப்கானிஸ்தான் வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், சட்டோகிராமில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தானின் அணித்தலைவர் ஹஷ்மத்துல்லாஹ் ஷகிடி, பங்களாதேஷை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், மழையால் பாதிக்கப்பட்டு போட்டி 43 ஓவர்கள் கொண்டதாக மாற்றப்பட்ட நிலையில் பஸல்ஹக் பரூக்கி (3), முஜீப் உர் ரஹ்மான் (2), அஸ்மத்துலாஹ் ஓமர்ஸாய், ரஷீட் கான் (2), மொஹமட் நபியிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 43 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், தௌஹிட் ஹிரிடோய் 51 (69) ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு ஆப்கானிஸ்தான் துடுப்பெடுத்தாடும்போது 21.4 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 83 ஓட்டங்களை பெற்றிருக்கும்போது மழை குறுக்கிட்ட நிலையிலேயே அப்போது டக் வேர்த் லூயிஸ் முறைப்படி முன்னிலையில் இருந்த ஆப்கானிஸ்தான் வென்றது. துடுப்பாட்டத்தில், இப்ராஹிம் ஸட்ரான் ஆட்டமிழக்காமல் 41 (58) ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில், ஷகிப் அல் ஹஸன், தஸ்கின் அஹ்மட் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக பஸல்ஹக் பரூக்கி தெரிவானார்.

இரண்டு அணிகளுக்கிடையிலான இரண்டாவது போட்டியானது நாளை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.



## இந்தியக் குழாமில் முதன்முறையாக திலக் வர்மா

இந்தியக் குழாமில் முதன்முறையாக திலக் வர்மா இடம்பெற்றார். வர்மாவோடு யஷஸ்வி ஜைஸ்வாலும் மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

குழாம்: இஷன் கிஷன் (விக்கெட் காப்பாளர்), ஷுப்மன் கில், யஷஸ்வி ஜைஸ்வால், திலக் வர்மா, சூரியகுமார் யாதவ் (உப அணித்தலைவர்), சஞ்சு சாம்ஸன் (விக்கெட் காப்பாளர்), ஹர்டிக் பாண்டியா (அணித்தலைவர்), அக்ஸர் பட்டேல், யுஸ்வேந்திர சஹால், குல்டீப் யாதவ், ரவி பிஷ்னோய், அர்ஷ்டீப் சிங்க், உம்ரான் மலிக், ஆவேஷ் கான், முகேஷ் குமார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 07 ஜூலை 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.